ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1813/4 - 2013 ජූනි 03 වැනි සඳුදා - 2013.06.03
*1813/4 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ஹபு/காஎடு/1/68.
காணி அமைச்சின் இல. : 4/3/8/2011/பீசீ/219.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், ஹப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், மகபலாத்த கோரளை சிறு பிரிவில், இல. 63 பி - தியத்தலாவை கிராம சேவகர் பிரிவில், தியத்தலாவை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2013.04.24 ஆம் திகதிய 28 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் (பிற்சேர்க்கை இல. 55, தாள் இல. 60) துண்டு இல. 1359, 1360 எனக் காட்டப்பட்ட 0. 1203 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட இரண்டு (02) காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 1359**
காணியின் பெயர் : தியத்தலாவ பத்தன ; விபரம் : தோட்டம், 15 - 20 வருட வயதிலான கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : சூரியதாச பிராஹ்மனலாகே சுமித்ரா, ஆஸ்பத்திரி வீதி, தியத்தலாவை ; விஸ்தீரணம் : 0.0242 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 1360**
காணியின் பெயர் : தியத்தலாவ பத்தன ; விபரம் : தோட்டம் 15 - 20 வருட வயதிலான கலப்புப் பயிர்ச்செய்கையும் நிலையான கட்டிடமொன்றும் நீர்த்தாங்கியொன்றும் காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : சூரியதாச பிராஹ்மனலாகே சுமித்ரா, ஆஸ்பத்திரி வீதி, தியத்தலாவை ; விஸ்தீரணம் : 0.0961 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆம் திகதி மு. ப. 09.00 மணிக்கு ஹப்புத்தளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. பீ. அனுர ஹேமகுமார,
பிரதேச செயலாளர்,
ஹப்புத்தளை.

பிரதேச செயலகம்,
ஹப்புத்தளை.
2013.05.29.

06-372